50 ம் ஆண்டில்

# தமிழ்நெஞ்சம்

## புகழாரம்



தமிழ்நெஞ்சம்
தோற்றம் 1972

ஆக்கம்
**ஏடி வரதராசன்**

# தமிழ்நெஞ்சம் அமின்

# புகழாரம்

ஆக்கம்

## ஏடி வரதராசன்

தமிழ்நெஞ்சம் 50

# வாழ்த்துரை

ஏடிவரதராசன் பாக்களுக்கும்

தமிழ்நெஞ்சத்திற்கும்

...

சீரிளமை வாய்கிறது நாளுக்குநாள் . அந்தச்
செப்பிடுவித்தைகள் எப்படியோ
பேரும்புகழ்மையும் வாய்கிறதே . அந்தப்
பீடுநடைக் கெந்தம் வாழ்த்துகளே
அய்ம்பதாம் அகவையும் பேரெழிலாம் . தமிழ்
அமின் வளர்க்கிற செவ்வியலாம்
மொய்ம்பு மிகவுறு பாவலராம் . தமிழ்
முற்றம் அணுகி வளர்பவராம்
வாழ்த்துரை வெண்பா வழங்கினனாம் . ஏ.டி.
வரத ராசனெனும் பாப்பு லியாம்
காழ்த்த தமிழ்நடை வல்லவனாம் . அவன்
கவிதையில் செந்தமிழ் மின்னல்களாம்
அத்தனையும் ஆணி முத்துகளாம் . நம்
அமினுக்குச் சேர்தமிழ்ச் சொத்துகளாம்
முத்தமிழ் மாமாயம் அத்தனையும் . வந்து
முத்தம் இழைத்தன வாழியவே
தமிழ்நெஞ்சம் வாழிய வாழியவே . அம்பது
தாண்டிப்பன் நூறாண்டு வாழியவே
தமிழ்நெஞ்சம் நம்அமின் வாழியவே . தமிழ்த்
தகைமையும் வண்மையும் வாழியவே

**தாங்க அன்பு வல்லி**

பட்டுக்கோட்டை

# தமிழ்நெஞ்சம்

திங்களிழ்

ஐம்பதாம் ஆண்டில்...

ஐம்பது வெண்பாக்களில்

## புகழாரம்

## விநாயகர் துதி

முக்கண்ணன் மூத்தவனே மூச்சில் நிறைந்தவனே
அக்கரையின் ஆலத்து அடியோனே - எக்கணமும்
சீக்கல் தனைப்போக்கச் சீலம் கொடுத்திடுவாய்
வக்ரதுண்ட னேயுன் வரம்.

கௌரிக்கு மைந்தா கயமுகனே உத்தண்டா
எவ்வுலகும் முன்வணங்கும் ஏகதந்தா - மௌத்திகமாய்
என்னுள்ளே பூத்த இறைவா உனைவணங்க
எண்ணத்தை நாளும் இடு.

அங்குச தாரியே ஆகீசா விக்கினேசா
கங்குல் அகற்றும் கரிமுகனே - அங்கமெல்லாம்
உன்னைமட்டும் போற்றி உடல்கரைந்தே நான்இளைக்க
என்மீதுன் பார்வை இடு.

## சரஸ்வதி துதி

வெண்டா மரையாளே வேதா பனுவலாட்டி
அண்டத்து ஞான அருளுருவே - செண்டுமலர்
உங்கருணை சேர உயர்மலையில் நான்பறிப்பேன்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

சகல கலாவல்லி சங்கீதா வித்யா
அகலவிடர் உந்தன் அடியை - அகம்நினைந்து
எல்லாம் மறந்தே இறைஞ்சுகிறேன்; என்றனுக்குன்
உள்ளத்(து) இடத்தை ஒதுக்கு.

பாமகளே சாஸ்த்ரா படிப்பருளும் காயத்ரி
நாமகளே வித்யா நலஞ்சேர்க்கும் - பாமகளே
நூலறியும் முன்னம் நுவலும்என் நாமம்உன்
காலடியே என்பேன் கனிந்து

# தமிழ் வணக்கம்

சொல்லும் பொருளும் சுவைசேர்ந்த கற்கண்டாய்த்
துள்ளியெழும் பாக்களெல்லாம் துய்மதுவாய் - அள்ளியள்ளிப்
பொங்கத் தெளிக்கும் புவனத்தில் செந்தமிழே
எங்கேயும் காணா இனிப்பு.

மொழிவேறும் உண்டோ; மொழிவாரும் உண்டோ;
மொழியெல்லாம் போற்றும் மொழியாய்; - மொழியும்
மொழிக்கெல்லாம் ஆதி மொழித்தமிழே என்றெம்
மொழியும் மொழியும் மொழி.

## அவையடக்கம்

கானகத்தே வாழுங் களிற்றானை தாகத்தைக்
கானல்நீர் தீர்க்கின்ற காட்சியொக்கும் - ஞானமொழிச்
சீராளும் பாவலரின் செல்லத் தமிழ்நெஞ்சைப்
பாராட்டி நான்பாடும் பாங்கு.

கார்நடத்தும் வான்மழையாய்க் கன்னித் தமிழ்மொழியால்
சீர்நடத்தி ஆண்டே சிறப்பித்துப் - போர்நடத்தும்
மெய்ப்படையின் முன்னே மிகையில்லா என்பாட்டோ
கைகால்கள் இல்லா கவி.

## புகழாரம்

தேடாத் தமிழ்ச்சுவையைத் தேடி அணிமலராய்
ஏடா யிரங்கோர்த்த இன்மாலை - வாடாமல்
அன்று மணப்பதைப்போல் ஐம்பதக வைகண்டும்
இன்றுவரை வாழும் இதழ்.

எண்ண விதையை எழுப்பிச் செடியாக்கி
வண்ணமல ராக வளர்த்தெடுத்து - முன்னிழுக்கும்
காந்தத் தமிழைக் கரமேந்திக் காப்பாற்றும்
பூந்தொட்டி இஃதாம் புரி.

நாட்டின் நடப்பும் நலம்பேசுங் கட்டுரையும்
கூட்டுங் கவியும் குறிப்புகளும் - ஏட்டுக்குள்
நேசமெனும் மையெழுத்தாம்; நேரம் ஒதுக்கிவிட்டால்
வாசகர்க்கும் ஓர்நல் வரம்.

ஆடும் கிடைவாழும்; ஆம்பல் குளம்வாழும்;
ஓடும்நண் டுக்கோ உளைவளையாம்; - ஏடுகளை
நெஞ்சம் தமிழ்நெஞ்சம் நித்தம் படைப்பதெல்லாம்
கொஞ்சும் தமிழுக்கும் கூடு.

கண்ணுள் விழியடங்கும்; காட்டில் கனியடங்கும்;
விண்ணில் மதியின் வியனடங்கும்; - பண்ணைப்
பொருவில்லா நூலாக்கும் பொற்றமிழின் நெஞ்சம்
திருவில் அடங்கியுள்ள தேர்.

அலைகனக்கத் தத்தளித்தே ஆடும் எறும்பை
இலைகரையில் சேர்த்திடுமாம் இங்கோ - குலையாய்ப்
பழுத்த தமிழ்நெஞ்சம் பாவலர்கள் கொண்ட
எழுத்தைக் கரைசேர்த்த(து) ஈங்கு.

பேட்டி எடுத்துப் பிறர்பற்றிக் கட்டுரையை
ஏட்டில் பதிக்கும் இதழ்கண்டு - காட்டிலுள்ள
பிச்சிப்பூ முற்காலம் பேசிப் பிழையன்றி
அச்சிடுங்கள் என்றதடா ஆங்கு.

ஓர்பக்கம் நான்படித்தேன் உள்ளபடி மெய்மறந்தின்
னோர்பக்கம் நான்புரட்டா(து) ஓய்வெடுத்தேன் - சீர்புரளும்
மன்றத் தமிழ்நெஞ்ச மாக்கவிநூல் மீதியினைத்
தென்றல் புரட்டியதே தேர்ந்து.

நம்மெண்ணத் துக்கத்தை நாம்சுமக்க நாளெல்லாம்
இம்மை வெறுப்போம் இடிந்தழுவோம் - செம்மொழியால்
மற்றவரெண் ணத்தை மனத்தே சுமப்பதற்குக்
கற்போம் தமிழ்நெஞ்சம் கண்டு.

இந்தத் தமிழ்நெஞ்சம் என்னும் எழில்நூலில்
வந்தச்சாய் மாறாத வார்த்தையெல்லாம் - சிந்தக்கண்
நீர்வளர்த்துக் கொண்டு நியாயம் தனைக்கேட்டுப்
போர்வளர்க்கும் நாளைப் புரி.

கற்சுவரும் மண்சுவரும் காவலுக்கு முள்வேலி
பொற்சுவரும் உண்டாம் புவனத்தில் - நற்றமிழின்
காடுள்ள பூவாசக் காவல் தமிழ்நெஞ்சத்(து)
ஏடும் சுவரென்(று) இயம்பு.

ஆணின் துணையாய் அவர்மனைவி; அல்லிருண்ட
வானின் துணையாம் வளர்நிலவு; - ஏணியன்ன
மாவலிமை கொண்ட மணக்குந் தமிழ்நெஞ்சம்
தூவலுக்கோர் நல்ல துணை.

காலைக்(கு) அழகாம் கதிர்வெளிச்சம்; துள்ளிவருங்
காளைக்(கு) அழகாம் கருங்கொம்பு; - வேளையெல்லாம்
தன்னைக் கொடுத்த தமிழ்நெஞ்சம் நாம்பேசும்
அன்னைத் தமிழுக்(கு) அழகு.

பள்ளத்தே வீழ்ந்தால் படும்புண் எரிச்சலினைச்
செல்லும் வளிதான் சிறிதாற்றும் - உள்ளத்தே
நாளெல்லாந் துன்பில் நலிந்தால் தமிழ்நெஞ்ச
நூலெல்லாம் ஆறுதலின் நூற்பு.

பெண்ணுளத்தில் வாழும் பெருங்காதல் மன்னவனைக்
கண்ணிமைபோல் சேர்ந்தால் களித்திடுவாள் - பண்ணுளங்கள்
அச்சாகிச் சேரந்தால் அகம்மகிழ்வார் செந்தமிழர்
உச்ச தமிழ்நெஞ்சத்து உற்று.

செல்லும் பயணத்தில் சிக்கித் தவிப்பவர்க்குத்
துள்ளுந்துக் காரன் துணையன்ன - உள்ளத்தே
தக்கமகிழ் வின்றேல் தமிழ்நெஞ்சம் வாசித்தால்
துக்கத்தில் நிற்கும் துணைக்கு.

கணக்கன்றிக் காசுபணம் காலடியில் கொட்டும்
பணக்காரன் ஏழ்மலையான் பாரீர் - மணக்கும்
அமிழ்தாய்ப் புலவர் அருங்கவிகள் கொட்டும்
தமிழ்நெஞ்சம் அவ்வைப்புத் தான்.

காற்றில் அடங்குமாம் ஈரம்; கருவிழிநீர்
ஊற்றில் அடங்குமாம் உள்மனது; - போற்றுமதி
அல்லில் அடங்கும் அணைப்பாம்; தமிழ்நெஞ்சம்
சொல்லில் அடங்குமோ சொல்?

சொற்கடலோ? போர்க்களத்தே சொல்லி அடிக்கின்ற
விற்கடலோ? தோண்ட விளைபூமிப் - பொற்கடலோ?
சிந்துகின்ற பாற்கடலாய்ச் சேருந் தமிழ்நெஞ்சே
எந்தக் கடல்நீ இயம்பு?

அணியணியாய் வண்ணங்கள்; ஆழங்கொள் வேர்ச்சொல்;
தணியாத பண்வாசத் தாக்கம்; - மணிமணியாய்ச்
செண்டு தமிழ்நெஞ்சில் சேர்ந்தே மதுவெடுக்க
மண்டுவார் பேரறிஞர் வந்து

பாலைக்குள் ஊற்றெடுத்துப் பாலாறாய் ஓடிவந்து
சோலை எனவாக்கும் சூழல்போல் - நூல்நிறைக்கும்
அன்னைத் தமிழ்நெஞ்சம் ஆழியெலாந் தாண்டியிந்த
மண்ணைச் சிறப்பிக்கும் மாண்பு.

புள்ளும் பறக்கப் புலர்வானம்; பூமணங்கள்
செல்லவதற்கோ பாதை சிறுதென்றல்; - துள்ளும்மீன்
தண்ணீரே வாழ்வு; தமிழ்நெஞ்சம் செந்தமிழின்
வண்ணங்கொள் பட்டு விரிப்பு.

மணக்கப் பிறக்கும் மலர்க்கூட்டம்; நெஞ்சம்
கனக்கப் பிறப்பதுவோ கண்ணீர்; - குணத்தை
அளக்கப் பிறந்த(து) அகம்"தமிழ் நெஞ்சம்"
வளர்ப்பதுகாண் செந்தமிழை வார்த்து.

சொல்லும் பொருளுஞ் சுடரான செந்தமிழை
எல்லையில் லாமல் எடுத்தேக - வில்லம்பாய்
அண்டங்கொள் விண்மீன்போல் ஆசை மனங்கொண்டுக்
கண்டங்கள் மாற்றியதோ காற்று?

எங்கள் ஒலியும் எழுத்தாக்க  வாய்ப்பிருந்தால்
அங்கே பிரசுரிக்கும் ஆசையெழ - இங்குள்ள
மண்வாழுங் கால்நடையும் மாந்தோப்புப் புள்ளினமும்
கண்சிமிட்ட வாழும் கவி

தண்ணீரும் அன்றித்; தரையன்றிச் செந்தமிழின்
எண்ணெழுத்தெல் லாம்பெருக்கி ஏடாக்கிக் - கண்ணறியக்
கோடான கோடி கொடுக்கிறதே; நம்மொழியும்
ஏடா நிலமா இதற்கு?

தேரோட்டப் பேரெழிலாய்த் தேன்பா தமிழ்நெஞ்சச்
சீரோட்டம் வாசித்துச் செல்லுங்கால் - நீரோட்டக்
காட்டாறோ என்று கரையோர நாணலெல்லாம்
ஏட்டோரஞ் சாயும் இசைந்து.

சேர்ந்திருக்குஞ் செந்தமிழுஞ் செல்லத் தமிழ்நெஞ்சும்
ஓர்ந்திருக்கும் மோகத்தை உள்ளுணர்ந்து - சோர்ந்ததையா
பாவாய்க்கா மத்தை பதிக்காமல் கைகொண்டப்
பூவாளி வேந்தன் பொருள்.

கண்ணின் விருந்தென்றால் காட்சி; அரசாளும்
மன்னுக்கோ ஊர்செழிக்கும் மாற்றங்கள்; - எண்ணத்தில்
சுற்றும் தமிழ்நெஞ்சம் சொல்தேடி வாசிக்கும்
விற்பன்ன ருக்கோர் விருந்து.

அல்லின் நிறமிளகை ஆறேழு வைத்திருந்தால்
பொல்லான் விருந்திற்கும் போய்வரலாம் - சொல்லாளும்
பொன்றா தமிழ்நெஞ்சப் புத்தகத்தால் கற்றோர்முன்
நின்று நிமிர்த்திடலாம் நெஞ்சு.

தாகம் பெருகுவதாய்த் தம்பதிக்குள்; பந்தயத்தில்
வேகம் பெருகுவதாய் வெற்றிக்கு; - மோகமொழி
முக்கனியாய் நாம்சுவைத்து முற்றும் படித்திடநூல்
பக்கம் பெருகியதே பார்.

கற்பனைகள் தீயாய்க்; கவிதையெலாம் வான்முகிலாய்ச்;
சொற்பதமே காற்றாய்ச்; சுடரணியே - நற்புவியாய்ச்
செய்யுள் நதியாய்ச் செழித்த தமிழ்நெஞ்சம்
ஐம்பூதக் கூட்டென்(று) அறி.

பாட்டோ குரல்வளையாம்; பாவையெழில் தாய்மையிலாம்;
தீட்டும் அறிவோ திறமையிலாம்; - கூட்டும்
அமிழ்தெல்லாம் ஏடாய்; அணியெல்லாம் நூலாய்த்
தமிழ்நெஞ்சில் என்றால் தகும்.

நாடகமும் மேடை நடந்தால் அரிதாரம்
ஆட வியர்த்தே அழிந்துவிடும் - தேடறியா
பூத்த தமிழ்ச்சொற்கள் பூசும் தமிழ்நெஞ்சக்
கூத்துக்கு நேருண்டோ கூறு?

ஊருக்குப் போகுங்கால் உட்கார்ந்தோர் சன்னலோரம்
சீர்கொண்ட பண்படித்தே சென்றிருந்தேன் - பேருந்து
நின்றும் தமிழ்நெஞ்சை நீவாசிப் பாயென்று
கண்டென்மேல் வீசியதே காற்று.

சொல்லுக்கு நாலடியார்; சூத்திரமே வள்ளுவமாம்;
புல்லுதற்குக் கொக்கோகப் புத்தகமாம் - தொல்லுலகில்
ஆலாய்க் கலந்தெல்லாம் ஆக்குந் தமிழ்நெஞ்சம்
நாலாந் தமிழென்றே நம்பு.

பாதிமனத் தோடு பருவத்தின் ஆசையெலாஞ்
சாதிமதத் தாலே சரிந்துவிட்டால் - ஓதி
அமிழ்தாய் அறமும் அழகியலும் செப்புந்
தமிழ்நெஞ்சைக் காதலிக்குத் தா.

அன்னைத் தமிழ்ப்பந்தல்; ஆர்க்குஞ்சொல் தோரணமாம்;
கண்ணே மணமேடைக் கன்னியெழில் - பண்ணெழிலாம்;
மட்டில் தமிழ்நெஞ்சே மாங்கல்யம்; வாசகர்க்குக்
கட்டிலிடும் நாளுங் களித்து.

முன்னெழிலே மோனை; முகிழும் எதுகையெலாம்
பின்னெழிலாய்ச் சொல்லில் பிணைந்திருக்கப் - பண்ணென்னுஞ்
சோலைமகள் சீரிடையில் சொக்குந் தமிழ்நெஞ்சம்
சேலையென நிற்கும் செழித்து.

கண்ணோடு கண்பேசக் காதல் மலர்மலரும்
மண்ணோடு விண்பேச மாமழையாம்; - எண்ணம்
உகந்த தமிழ்நெஞ்சோ(டு) ஓர்ந்துளம்பே சுங்கால்
அகந்தன்னில் பூக்கும் அறிவு.

சொல்லாடல், கட்டுரைகள், சொக்கவைக்கும் பாடுபொருள்
எல்லையில்லாக் கற்பனைகள் இன்பணிகட்க் - கெல்லாம்
தடந்தந்த தாலே தமிழ்நெஞ்சுக் கிங்கே
கடன்பட்டே சிந்துதையா கண்.

காம்பே மலர்தாங்கும்; காலே உடல்தாங்கும்;
ஆம்பலினை நீரே அடிதாங்கும்; - தேம்பண்ணின்
அன்னைத் தமிழ்தாங்கி அங்கையில் தாலாட்ட
உன்னைப்போல் உண்டோ உரை?

பூவன்றி வாசமில்லை; புல்லலன்றிக் காமமில்லை;
நாவன்றி வார்த்தையில்லை; ஆனாலும் - ஆவலுடன்
சீரில் சரங்கோத்துச் சிந்துந் தமிழ்நெஞ்சம்
நாரில்லா மாலை நமக்கு.

மூங்கில் குழலாகும்; மொட்டும் மலராகும்;
பூங்காற்றும் ஓர்நாள் புயலாகும்; - தாங்கிவருஞ்
சொற்குவியல் ஊற்றாய்ச் சுரக்கும் தமிழ்நெஞ்சம்
நற்குணமாய் ஆகும் நயந்து.

தாயில்லாச் சேயாவான்; தாரில்லாத் தோளாவான்;
காயில்லா வெண்பாக் கதியாவான்; - வாயில்
அமிழ்தூற வைக்கும் அகிலத்தின் நூலாம்
தமிழ்நெஞ்சம் கைகொள்ளா தான்.

செய்தியெல்லாம் வார்முரசம்; செம்மொழியே ஒற்றர்கள்;
மெய்யோ(டு) உயிரிங்கே மேலமைச்சாய்;  -  ஐயமற
வாள்போல் கவிப்போர் வளர்த்துத் தமிழ்நெஞ்சம்
ஆள்கிறதே நெஞ்சில் அரசு.

காட்டுக்குள் சிங்கம்; கடலில் திமிங்கிலமாம்;
ஏட்டுக்குள் நீதி எனும்படியாய்ப்; - பூட்டாத
காலில் கலந்துமொழி காக்கும் தமிழ்நெஞ்சம்
நூலினத்தின் ஓர்தலையாய் நோக்கு.

காதலையுஞ் செப்புமிதழ்; காலத்தைக் காட்டுமிதழ்;
வேதனையும் பாவாய் விளக்குமிதழ்; - போதனைகள்
வந்துள்ளம் ஓதுமிதழ்; வாழ்வில் வலக்கரமாய்
இத்தவிதழ் அல்லா(து) எது?

நாட்டுப் புலவர்கள் நாட்டிவைத்த பாக்களைத்தான்
ஏட்டில் படித்தோம் இதுவரையில்; -  கூட்டிவெளி
நாட்டுத் தமிழ்க்கவியை நாடி ஒருங்கிணைத்து
ஊட்டும் தமிழ்நெஞ்சம் ஓர்.

வண்ண ரதத்தில்மன் வாரும் பவனியைப்போல்
எண்ணரதரம் ஏறும் எழில்நூலே  - உன்னோடு
கன்னித் தமிழ்ச்சாலைக் கால்பதிப்ப தன்றியிங்கே
என்னவரம் வேண்டும் எனக்கு?

# தமிழ்நெஞ்சம்

திங்களிதழை வழிநடத்தும்

## தமிழ்நெஞ்சம் அமின்

அவர்களின்

தமிழ்ச்சேவையைப் பாராட்டி

## 20 வெண்பாக்கள்

ஆளும் அரசியலின் ஆழக் களங்கண்டு
காலும் பதித்துக் கடந்தவராம் - மேலுமிங்கே
நாடிப் பலசெய்தி நல்லூ டகஞ்சேர்த்த
கோடி அவதாரக் கோன்.

எத்தனையோ சொப்பனத்தில் ஏடுகளைக் காணாமல்
முத்தான பாக்கள் முனகியழும் - அத்தனையும்
எண்ணியரங் கேற்றி இளங்கவிஞர் கட்கிவரும்
புண்ணியவான் என்றே புகல்.

ஏடுகளைச் செய்ய எதிர்ப்புப் பலவந்தும்
நாடு கடந்து நடத்தியவர் - ஓடும்
தமிழாறாய் நெஞ்சத் தனியுரத்தைக் கண்டு
குமிழாறும் நாணும் குனிந்து.

பெற்றவளைப் பெண்ணாள் பிரிந்து மனம்மாறி
உற்றவனைக் கூடும் உவமையொக்கும் - நற்றமிழும்
ஆழியெல்லாம் தாண்டி அமினைக் கரம்பிடித்து
நாழி கடத்தும் நடப்பு.

இன்னும் தமிழ்நெஞ்சம் ஈடில் நிலைகடக்க;
விண்ணில் மதியாய் விளங்கிநிற்க; - மண்ணில்வாழ்
பாவலர்க்கும் நல்ல பலமாய் விளங்கிமொழிக்
காவலாக நிற்கட்டும் காத்து.

தூவல் இவர்பிடித்தால் துய்ய தமிழுக்குக்
காவல் எனப்படைப்பார் காவியமும் - ஆவல்
அகங்கொண்டு தூரிகையை அங்கையால் தொட்டால்
நகலாய் உனைவரைவார் நன்கு.

கைப்பிடித்துச் செல்லும் கவிஞர் அமின்அவர்கள்
செய்கின்ற சேவை சிறப்பாக - வையத்தே
பல்லாண்டு வாழ்கவெனப் பைந்தமிழை நான்கேட்டுச்
சொல்லாண்டேன் நெஞ்சம் சுரந்து.

முத்துத் தமிழ்மொழியை முன்வந்து காப்பாற்றும்
சொத்தாய் விளங்கும் சுடர்விளக்கே - இத்தனைக்கும்
மெய்யாய் உழைக்கும் மிகையுள்ளச் சேவைக்குக்
கைமாறும் உண்டோ கணக்கு?

போகும் உலகத்தில் பொன்பொருளைத் தேடாமல்
பாகுபாடே அன்றிப் பயணித்து - கோகுலத்துக்
கண்ணன்கொள் ராதையைப்போல் கன்னித் தமிழைநீ
உன்னோடு வைத்தல் உயர்வு.

இன்தமிழின் வான்நீ; இலக்கணத்தின் பெட்டகம்நீ;
தொன்மறவர் கூடுகின்ற தோட்டம்நீ; - கண்ணிமையாய்ப்
பாவலர்கள் செல்வதற்குப் பாதைநீ; உன்னைப்போல்
ஆவலில்லை யார்க்கும் அறி.

அன்னைத் தமிழ்காக்கும் ஆவலெல்லாம் வானேறி
என்னைப்பண் செய்யென்(று) இழுக்கிறது - மன்னைப்போல்
ஐயா! உமையும் அணித்தமி ழையுமொன்றாய்
மெய்யுணர்ந்தேன் என்னுள் மிகைந்து.

வண்ணத் தமிழெல்லாம் வாழ்க்கைப் படும்இல்லம்
உன்னில்லம் தானே உலகத்தில் - எண்ணெழுத்தை
ஏட்டில்நீ வைக்கவில்லை எட்டாச் சுவரமைத்த
கோட்டைதான் என்றே குறி.

எண்ணத்தில் வைத்தாய்; இடம்வலத்தே தான்வைத்தாய்;
கண்ணுக்குள் வைத்தாய் கனித்தமிழை; - மண்ணைப்போல்
என்றென்றும் தாங்கும் இதயம் படைத்தவரே
பொன்றாத் தமிழுன் பொதி.

நினைவில் உதித்ததெல்லாம் நிற்கும்நூல் ஆக்கிப்
பிணைத்தேநற் புத்தகமாய்ப் பின்னும் - உனைக்கண்டு
வானின் வழியே வளர்ப்பதற்குத் தந்தாளோ
வாணியவள் மொத்த வரம்?

செய்யுள் படைத்துவிட்டால் சேருமிடம் நீயென்ற
மெய்யில் கலந்து மிளிர்கின்றாய் - வையத்தே
உன்னிடத்தில் அச்சாக்கும் ஒவ்வோர் கவிதைகளும்
விண்ணிடத்தில் என்றே விளம்பு.

ஏட்டைப் படைக்கும் இனிய கனவாலே
கூட்டிக் கவிஞர் குவித்துவைக்கும் -- பாட்டுக்கோர்
இல்லம்நீ என்றறிந்தே இங்கே படைக்கின்றார்
கல்லாதார் கூடக் கவி.

பூக்கள் பிறந்தரும்பாய்ப் பூத்துக் குலுங்குவது
மாக்களெல்லாம் சூடுகின்ற மாலைக்கே - பாக்களன்றிக்
கச்சிதமாய் வெண்ணிறத்தில் காகிதங்கள் ஏனென்றால்
அச்சிடுவாய் என்றே அறிந்து.

போதித்த தாய்மொழியைப் பொற்கவியாய் ஆக்குங்கால்
பாதிப்பண் மட்டும் பயணித்தேன் - மீதிப்பண்
அச்சிடுவ(து) எங்கென்(று) அமினை மனமெண்ணி
இச்சமயங் கேட்ட(து) எனை.

பாவலர்கள் கையில் பயணிக்கும் சொற்களுக்கோ
ஆவலெல்லாம் உன்மேல் அறிவாயா? - தூவலெல்லாம்
எங்கள் கரமிருந்தும் ஏடாய் உருமாற
உங்களைத்தான் நம்பும் உளத்து.

சொற்களெல்லாம் ஏடாக்கி சுந்தரஞ்சேர் வையத்தில்
கற்றோர்க்கு நல்ல கருத்தூட்ட - உற்றும்மை
ஆழ்ந்துலகம் நோக்கி அடடா!!! எனவியக்க
வாழ்க தமிழை வளர்த்து




தீட்டிய வெண்பா வெல்லாம்
திகைக்கவே வைத்த திங்கே
கூட்டிய கற்ப னைகள்
குளிரவே சிலிர்த்து சீரில்
ஊட்டிய அணிகள் நெஞ்சை
உலுக்கியே போக உள்ளம்
நாட்டிய வார்த்தை ஆஹா
நர்த்தனம் ஆடு திங்கே

மூச்சென இருந்தால் தானே
முத்தமிழ் கூடும்; வெண்பா
பேச்சென இருந்தா லன்றோ
பெருவசை சேரும்; கோலை
ஓச்சிய பொருள்கள் உங்கள்
ஒண்டமிழ் திறனை காட்ட
வீச்சரி வாளோ என்று
விரலெலாம் நடுங்கிப் போனேன்

இன்னுமே தமிழை காக்க
இனியதோர் மதுவுந் தோற்க
எண்ணுடன் எழுத்துஞ் சேர
எழிற்கவி நாளும் பூக்க
கண்ணிமை யாக என்றும்
கவின்தொடை யோடு பாடும்
உன்னுடன் வெண்பா நாளும்
உடன்வர வாழ்த்து கின்றேன்

தமிழ்நெஞ்சம் அமின்